




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 213 26.1.2026 MONDAY THAI : 12 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 213 26.1.2026 திங்கள்கிழமை தை : 12 விலை : ரூ.5/-


## மத்திய அரசில்

# “61,000 பேருக்கு வேலைக்கான நியமன கடிதம்”

## பிரதமர் மோடி வழங்கினார்

சென்னை, ஜன.26-

நாடு முழுவதும் 45 இடங்களில் நேற்று வேலைவாய்ப்பு திருவிழா நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி காணொலி முறையில் பங்கேற்று 61,000 பேருக்கு மத்திய அரசு வேலைக்கான நியமன கடிதங்களை வழங்கினார்.

மத்திய அரசு சார்பில் ‘ரோஜ்கர் மேளா’ என்ற பெயரில் வேலை வாய்ப்பு திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. இதில் அரசின் பல்வேறு துறைகளில் காலி பணியிடங்களை நிரப்ப தகுதியான நபர்களுக்கு நியமன கடிதங்களை பிரதமர் மோடி வழங்கி வருகிறார். மற்ற மாநிலங்களில் அமைச்சர்கள் நியமன கடிதங்களை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் 18 வது வேலைவாய்ப்பு திருவிழா நாடு முழுவதும் 45 இடங்களில் நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி காணொலி முறையில் பங்கேற்று 61,000 பேருக்கு நியமன கடிதங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:




உலகிலேயே இளைஞர்களை அதிகம் கொண்ட நாடு இந்தியா. அவர்களுக்காக பல நாடுகளுடன் இந்தியா வர்த்தக ஒப்பந்தம் செய்கிறது. இந்த வர்த்தக ஒப்பந்தங்கள் நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை கொண்டு வருகின்றன.

அரசுத் துறைகளில் பணியாற்ற நியமன கடிதம் பெற்றுள்ள 61,000க்கும் மேற்பட்டோரின் வாழ்வில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. இந்த நியமன கடிதங்கள், நாட்டை மேம்படுத்துவதற்கும், வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உறுதிமொழியை ஏற்பதற்குமான அழைப்பு கடிதங்கள். இதன் மூலம் இளைஞர்கள் பலர் நாட்டின் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், நிதிசேவை, எரிசக்தி பாதுகாப்பு ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி பொதுத்துறை நிறுவனங்களை வளர்ச்சியடைய செய்வர். நியமனமான இளைஞர்களுக்கு வாழ்த்துக்கள். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், ‘‘வேலைவாய்ப்பு திருவிழாவை தொடங்கியதில் இருந்து இது வரை 11 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நியமன கடிதங்கள் அளிக்கப்பட்டுள்ளன. புதிதாக நியமனம் செய்யப்பட்டவர்கள் மத்திய உள்துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நிதி சேவைகள் துறை, உயர்கல்வி உட்பட பல துறைகளில் பணியாற்றுவர்’’ என கூறியுள்ளது.



## திருப்பூர் திருமுருகன்பூண்டியில் நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் சிறப்பு கூட்டம்

திருப்பூர், ஜன.26-

நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் சிறப்பு கூட்டமானது, திருப்பூர் திருமுருகன்பூண்டி ஸ்ரீ வேலன் மஹாலில், தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் திருப்பூர் மேற்கு ரோட்டரி மக்கள் மருத்துவமனை நிறுவனத் தலைவர் Rtn. ரகுபதி மற்றும் திருப்பூர் மேற்கு ரோட்டரி முன்னாள் தலைவரும், மலைவாழ் மக்கள் தலைவருமாகிய Rtn. A.சுரேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

பொதுநல பணிகளில் இவர்களின் மேலான அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன், மேலும் நல்லாற்றின் இரு கரைகளையும் சுத்தம் செய்வது சம்பந்தமாக திட்டமிடுதல், செயல்படுதல் சம்பந்தமாகவும், சமூக ஆர்வலர்கள் மற்றும் கௌரவ தலைவர்களை இணைத்தல் ஆகியவற்றை முன்னெடுப்பதன் மூலம் சிறப்பாக செயல்பட முடியும் என ஆலோசிக்கப்பட்டது.

இச்சிறப்பு கூட்டத்தில், நல்லாறுபாதுகாப்பு இயக்கத்தின் அனைத்து முக்கிய நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

## “திமுகவோடு மோதும் அளவுக்கு எதிரிகளுக்கு வலிமை இல்லை”

### அமைச்சர் ரகுபதி

சென்னை, ஜன.26-

திமுகவோடு மோதுகின்ற அளவுக்கு எதிரிகளுக்கு வலிமை இல்லை என மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தேசிய ஜனநாயக கூட்டணி என்பது அதிமுக ஒரு பகுதியும், பாஜக ஒரு பகுதியுமாக இணைந்த கூட்டணிதானே தவிர, அது வலுவான கூட்டணி இல்லை. பலவீனமான கூட்டணிதான். அது எத்தனை கட்சிகளோடு வந்தாலும் இண்டியா கூட்டணியை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. தமிழக மக்களின் மனதில் உள்ளவர்கள்தான் வெல்ல முடியுமே தவிர, கூட்டத்தைக் கூட்டி யாரும் வெல்ல முடியாது.



தமிழக மக்களின் மனநிலையை ஒவ்வொரு சர்வே மூலமும் அறிந்துள்ளோம். திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும். அதன் மூலம் தங்களுக்கு இன்னும் பல நன்மைகள் கிடைக்க வேண்டும் என்பதுதான் அதன் மூலம் தெரியவந்துள்ளது. இத்தகைய தமிழக மக்களின் விருப்பத்தை பிரதமர் மோடியாலோ, மற்றவர்களாலோ புரிந்துகொள்ள முடியாது.

வரும் தேர்தல் திமுகவுக்கு கடைசி சேர்தல் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறுகிறார் எனில், 11 முறை தோல்வியைச் சந்தித்த அவருக்கு 12 வது தோல்வியை வரும் தேர்தல் தரும்.

தேர்தலுக்காக பிரதமர் மோடி ஆயிரம் குற்றச்சாட்டுகளை முன் வைத்தாலும் அவை தேர்தலில் எதிரொலிக்காது. கூட்டணிக்கு யார் வந்தாலும் வரவேற்று, அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கும் கட்சிதான் திமுக. எங்களை நம்பி வருபவர்கள் கெட்டுப்போக மாட்டார்கள். மற்ற கட்சிகளுக்கு செல்பவர்கள்தான் மோசம் போவார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

திமுக கூட்டணி குறித்து கட்சியின் தலைவர் முடிவு செய்வார். அதை பற்றி பேசுவதற்கு எங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அதிமுகவைப் பற்றி கடுமையாக விமர்சித்துவிட்டு அதே கட்சியோடு டிடிவி.தினகரன் கூட்டணி சேர்ந்திருப்பது வெட்கக் கேடானது. எதிர்க்கட்சிகள் கூட்டும் கூட்டத்தைவிட திமுகவின் மகளிர் அணி, இளைஞர் அணியின் மூலம் அதிக கூட்டத்தை கூட்டி காண்பித்து இருக்கிறோம். விரைவில் மண்டலம் வாரியாக பூத் கமிட்டியைக் கூட்ட உள்ளோம். பகுதி, பகுதியாக மக்கள் அலையைக் கொண்டு வந்து சேர்க்கும் சக்தி இந்தியாவில் திமுகவுக்கு மட்டும் தான் உண்டு.

நாங்கள் எப்போதும் எதிரிகள் இல்லை என்று கூறும் இறுமாப்பு பிடித்தவர்கள் அல்ல. எதிரிகள் இருக்கிறார்கள். ஆனால், எங்களோடு மோதுகின்ற அளவுக்கு அந்த எதிரிகளுக்கு வலிமை இல்லை என்றுதான் கூறுகிறோம். திமுகவின் வெற்றிக்கான கவுண்டவுன் தொடங்கி உள்ளது” என்றார்.

## அகரம் பேரூராட்சி பாப்பனம்பட்டியைச் சேர்ந்த அதிமுகவினர் 20 பேர் அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

சின்னாளபட்டி, ஜன.26

திண்டுக்கல் மாவட்;டம், ஆத்தூர் சட்;டமன்ற தொகுதிக்குட்பட்ட அகரம் பேரூராட்சி பாப்பனம்பட்டியைச் சேர்ந்த அதிமுகவினர் கணேசன், சுப்பிரமணி, குணசேகர், இராமர், முருகேசன், ஹரிக்குட்டி உட்பட 20 பேர் அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் திமுக தலைவர், நந்தகோபால் (எ) மணி, துணைத் தலைவர் ஜெயபால் தலைமையில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து சால்வை அணிவித்து, தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

நகரங்களை காட்டிலும் கிராமங்களில்தான் அதிக அளவில் திமுகவில் இணைகிறார்கள்.

காரணம் மத்தியில் ஆளும் பாஜக அரசு நூறு நாள் வேலைத்திட்டத்தை முடக்க நினைக்கிறது.



நிகழ்ச்சியின்போது கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், பிலால்உசேன், ஆத்தூர் தொகுதி திமுக தலைமை கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், முருகேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், கலைராஜன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, துணைத் தலைவர் ஜெயபால், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய துணைச் செயலாளர் சுமதி கணேசன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, அன்னம்பட்டி காணிக்கை சாமி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜீப் மற்றும் இளைஞரணியினர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## பிரயாக்ராஜ் மகர மேளாவில் உத்தராகண்ட் ஜோதிஷ்வர் மடத்தின் சங்கராச்சாரியார் தர்ணா

உத்தரபிரதேசம், ஜன.26-

உத்தரபிரதேசம் பிரயாக்ராஜ் நகரின் திரிவேணி சங்கமம் பகுதியில் மகர மேளா நடைபெற்று வருகிறது.

கடந்த 17ம் தேதி உத்தராகண்ட் மாநிலம், சமோலி மாவட்டத்தில் உள்ள ஜோதிஷ்வர் மடத்தின் சங்கராச்சாரியார் சுவாமி அவிமுக்தேஷ்வரானந்தா தனது சீடர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் கங்கை நதியில் புனித நீராட பல்லக்கில் வந்தார். அவரை தடுத்து நிறுத்திய உ.பி. காவல் துறை, அவிமுக்தேஷ்வர் அங்கு நீராட அனுமதி மறுத்தது.

அப்போது உ.பி. போலீஸார் மற்றும் அவிமுக்தேஷ்வர் ஆதரவாளர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து அவிமுக்தேஷ்வர், மேளா மற்றும் உள்ளூர் நிர்வாகத்துக்கு எதிராக தர்ணாவில் அமர்ந்தார்.

இது தொடர்பாக உ.பி. அரசின் மேளா நிர்வாகம் அவருக்கு 2 நோட்டீஸ்களை அனுப்பி விளக்கம் கேட்டது. மேளா சம்பவம் குறித்து ஒரு மேடையில் பேசிய முதல்வர் யோகி ஆதித்யநாத், ‘காலாநேமி (ராமாயணத்தின் ராட்சசன்)’ என அவிமுக்தேஷ்வரை விமர்சனம் செய்தார். இது துறவி சமூகத்தினர் இடையே மேலும் கோபத்தை தூண்டியது.

இந்தப் பிரச்சினையில் எதிர்க்கட்சிகளான சமாஜ்வாதியும் காங்கிரஸும் உ.பி. அரசை விமர்சனம் செய்தன.

இதுகுறித்து துணை முதல்வர் கேசவ் பிரசாத் மவுரியா கூறும்போது, “சங்கராச்சாரியார் பாதங்களை நாங்கள் வணங்குகிறோம். அவர் தனது புனித நீராடலை முடிக்க வேண்டும். துறவிகளை அவமதித்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம். இந்த விஷயத்தை இத்துடன் முடித்துக்கொள்ள வேண்டும்” என கேட்டுக் கொண்டார்.

எனினும், நேற்று முன்தினம் வசந்த பஞ்சமி புனித நீராடல் சடங்கையும் அவிமுக்தேஷ்வர் முடிக்க மறுத்து விட்டார். தன்னை அவமதித்த அரசு மன்னிப்பு கேட்பதுடன், அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் வரை போராட்டம் தொடரும் என்றார்.

ஜோதிஷ்வர் மடத்தின் சங்கராச்சாரியாரான பீடாதீஷ்வரர் சுவாமி சொரூபானந்த் சரஸ்வதி, கடந்த 2022, செப்டம்பரில் மறைந்தார். இதற்கு மறுநாள் மடத்தின் மூத்த துறவியான அவிமுக்தேஷ்வர், சங்கராச்சாரியாராக அமர்ந்தார்.

இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் சங்கராச்சாரியார் பட்டத்துக்கு 2022 அக்டோபரில் தடை விதிக்கப்பட்டு வழக்கு தொடருகிறது. எனினும் சங்காராச்சாரியர்கள் விவகாரத்தில் அரசுகளும், உச்ச நீதிமன்றமும் தலையிட முடியாது என அவிமுக்தேஷ்வர் கூறி வருகிறார்.

மேலும் அவிமுக்தேஷ்வர் தொடர்ந்து மத்திய மற்றும் உ.பி. பாஜக அரசுகளுக்கு எதிராக பேசி வருகிறார். காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியையும் அவர் விமர்சனம் செய்கிறார். இதனால் அவிமுக்தேஷ்வருக்கு நெருக்கடிகள் அளிக்கப்படுவதாகப் புகார்களும் உள்ளன.




# மாணவர்களின் கரங்களாலேயே வறியவர்களுக்கு உதவிப் பொருட்கள்

## மாணவப் பருவத்திலேயே உதவும் எண்ணம் வர வேண்டும் திசையன்விளை விஎஸ்ஆர் இண்டர்நேஷனல் பள்ளி அறக்கட்டளை அசத்தல்

திசையன்விளை. ஜன.26-

திசையன்விளை வி.எஸ்.ஆர்.இண்டர்நேஷனல் பள்ளியில் சுவாமிதாஸ் கல்யாணியம்மாள் அறக்கட்டளை சார்பாக ஆண்டுதோறும் பல நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் திசையன்விளை சுற்றுவட்டார பகுதியில் உள்ள மிகவும் பின்தங்கியவர்களான வறுமையில் வாடும் 200க்கும் மேற்பட்ட ஏழை எளியோரையும், ஆதரவற்ற முதியோர்களையும் தேர்ந்தெடுத்து இந்நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நலத்திட்ட உதவிகளில் பெற்றோரின் பங்களிப்பு மிகுதியாக இருந்தது. மாணவர்கள் வீடுகளில் இருந்து உணவுப்பொருட்கள், ஆடைகள், துண்டுகள், போர்வைகள் எனத் தங்களால் இயன்ற பொருள்களைக் கொண்டு வந்தனர். அம்மாணவர்களின் கரங்களாலேயே இவ்வறியவர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டது. பள்ளியின் தாளாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் பல உதவிப் பொருட்களை வழங்கினார். பாத்திமா எலிசபெத் நன்றியுரை வழங்கினார்.



# கரைசுத்து உவரியில் அதிமுக முன்னாள் எம்எல்ஏ மைக்கேல் ராயப்பன் துண்டு பிரசுரம் விநியோகம்

திசையன்விளை. ஜன.26-

நெல்லை மாவட்டம்இராதாபுரம் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கிராமங்களில், 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை மத்திய அரசு நிறுத்தி விட்டதாக திமுக., அரசு பொய் பிரசாரம் செய்து வருகிறது. அதிமுக சார்பில் தற்போது மத்திய அரசு 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை 125 நாட்களாகமாற்றிசெயல்படுத்தி வருவதாக பொதுமக்களும் தெரிவிக்க மாவட்டச் செயலாளர் இசக்கி சுப்பையா அறிவித்தலின்படி, ராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி.கே. செல்வராஜ் தலைமையில், அதிமுக மாநில கழக அம்மா பேரவை துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மைக்கேல்ராயப்பன் முன்னிலையில், அதிமுக மாவட்ட கழக வழக்கறிஞர் அணி செயலாளர் பீரதிஷ்குமார், துணைதலைவர் நவீன் முத்துசரவணன், உவரி ரமேஷ், சூடு உயர்ந்தான்விளை பாஸ்கர் உவரி சுப்பிரமணியன் மாடசாமி மற்றும் கட்சி தொண்டர்கள் ஏராளமானோர்

இராதாபுரம் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கரைசுத்து உவரி பகுதியில் துண்டு பிரசுரங்கள் வழங்கி பிரசாரம் செய்தனர். தொடர்ந்து பரதர் உவரி மற்றும் குட்டம் பகுதிகளில் பிரச்சாரம் செய்தனர்.



■ மதுரை மாவட்டம்,அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்,கீழக்கரை கிராமத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கத்தில்சிறப்பு ஜல்லிக்கட்டு போட்டியினை அமைச்சர் மூர்த்தி துவக்கி வைத்தார்,சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் மதுரை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் நெடுஞ்சாலை துறை சார்பில், ரூபாய் 190 கோடி மதிப்பீட்டில் கோரிப்பாளையம் சந்திப்பில் 2100 மீட்டர் நீளத்தில் மேம்பாலம் கட்டப்பட்டு வரும் பணிகளை அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வு செய்து பார்வையிட்டனர்நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் வனத்துறை, ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி இணைந்து குரங்குகள் குறித்த ஆய்வு தொடக்கம்

குற்றாலம், ஜன.26-

குற்றாலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வாழும் குரங்குகளை அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்ய, தென்காசி வனத்துறை மற்றும் பராசக்தி கல்லூரி (விலங்கியல் துறை) இணைந்து சிறப்பு ஆய்வு திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்த ஆய்வில் பராசக்தி கல்லூரியின் விலங்கியல் துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் நேரடியாக களப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். குரங்குகளின் கூட்டங்கள் (Troops), குடும்ப அமைப்பு, நடத்தை, உணவு பழக்கம், உயிரியல் தன்மைகள்



மற்றும் உடல்நல நிலை ஆகியவை விரிவாக பதிவு செய்யப்பட உள்ளன. இந்த ஆய்வு குற்றாலம் பகுதிகளிலும், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்கு வெளியேயுள்ள அருகிலுள்ள பகுதிகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

குற்றாலம் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்களை வரவேற்கும் முக்கிய சுற்றுலா தலமாகும். சமீப காலங்களில் குரங்குகள் தொடர்பான மனித விலங்கு மோதல்கள், உணவு பறித்தல் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் நுழைவு போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இதனை நிரந்தரமாகவும் மனிதநேயமாகவும் தீர்க்க அறிவியல் ஆய்வு அவசியமாகும்.

இந்த ஆய்வின் மூலம் கிடைக்கும் தரவுகள், குரங்குகளின் எண்ணிக்கை, வாழிடம் பயன்பாடு, உடல்நலம் மற்றும் நடத்தை குறித்த துல்லியமான தகவல்களை வழங்கும். இத்தகவல்கள் அடிப்படையில், மக்கள் விழிப்புணர்வு, கழிவு மேலாண்மை, உணவு வழங்கல் கட்டுப்பாடு மற்றும் மோதல் குறைப்பு நடவடிக்கைகளை வனத்துறை சிறப்பாக திட்டமிட முடியும்.

மாணவர்கள் இந்த ஆய்வில் பங்கேற்பது, இளம் தலைமுறையினரிடையே வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் அறிவியல் அணுகுமுறையை வளர்க்கும் ஒரு முக்கிய முயற்சியாகும். குற்றாலத்தின் சுற்றுச்சூழல் சமநிலையை பாதுகாக்கவும், பொதுமக்கள் மற்றும் வனவிலங்குகள் இருவரின் பாதுகாப்பையும் உறுதி செய்யவும், இந்த ஆய்வு முக்கிய பங்களிக்கும் என மாவட்ட வன அலுவலர் முனைவர் ரா. ராஜ் மோகன்.இ.வ.ப. தெரிவித்துள்ளார்.



# ராதாபுரம் பரமேஸ்வரபுரம் அதிமுக சார்பில் முன்னாள் எம்பி சௌந்தரராஜன் துண்டு பிரசுரங்கள் வழங்கி பிரச்சாரம்

திசையன்விளை. ஜன.26-

தமிழக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் மக்கள் நலத்திட்டங்களை எடுத்துக் கூறி ராதாபுரம் அருகே பரமேஸ்வரபுரம் மற்றும் இளையநயினார் குளம் ஆகிய கிராமங்களில் ஊரக வேலை வாய்ப்பு திட்ட பணியாளர்களிடம் அதிமுக சார்பில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் எம்பி சௌந்தரராஜன் துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை நாட்களை 100 லிருந்து 125 நாட்களாக உயர்த்த வேண்டும் என்ற எடப்பாடி பழனிசாமியின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அரசாணை வெளியிட்டுள்ளதை முன்னாள் கழக மாநிலங்களவை உறுப்பினரும் அதிமுக நெல்லை புறநகர் மாவட்ட கழக பொருளாளருமான சௌந்தர்ராஜன் பொதுமக்களிடம் விளக்கினார்.

ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோணி அமரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற மாநில துணைச்செயலாளர் செயலாளர் நாராயண பெருமாள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

மேலும் நிகழ்வில் ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.பி.கே.செல்வராஜ், பரமேஸ்வரபுரம் ஊராட்சி மன்ற தலைவர் மின்னல், மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் சுப்புராம், ஒன்றிய மாணவரணி செயலாளர் குமார், அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் விநாயகம், பரமசிவம் ஒன்றிய விவசாய அணி தலைவர், கிளைக் கழக செயலாளர் மின்னல், தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட இணைச் செயலாளர், சௌந்தரபாண்டியபுரம் கிளை செயலாளர் கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# தென்காசி புளியங்குடி ஸ்ரீ நரசிங்க பெருமாள் திருக்கோவில் முதலாம் ஆண்டு வருஷாபிஷேக விழா

தென்காசி, ஜன.26-

தென்காசி மாவட்டம் புளியங்குடி ஸ்ரீ நரசிங்க பெருமாள் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம், நடைபெற்றது அதனைத் தொடர்ந்து வருஷாபிஷேகம் நடைபெற்று வந்தது. இந்நிலையில் கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் காலை 9மணி முதல் கும்ப பூஜை ஹோம பூஜையுடன் சுவாமிக்கு பல்வேறு விதமான சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனை வேத மந்திரங்கள் முழங்க பூஜைகள் நடைபெற்றது அதைத் தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது வருஷாபிஷேக பூஜையில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும் இவ்விழாவில் முன்னாள் நகரமன்ற தலைவர் வெங்கட்ராமன்சாமி, புளியங்குடி நகராட்சி ஆணையாளர் நாகராஜ், பதினெட்டாவது வார்டு நகர மன்ற உறுப்பினர் செந்தாமரை, பாலகுமாரன், கோமதி விநாயகம், அன்னதானம் கட்டளைதாரர் பால விநாயகம், பார்வதி கௌசல்யா, பவ்யா, குடும்பத்தினர் கோவில் அர்ச்சகர் சந்தோஷ், விஜயன், ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 16வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மாணவர்களின் விழிப்புணர்வு நாடகத்தை பார்வையிட்டு, விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்து, உறுதிமொழி எடுத்துக்கொண்டு புதிய வாக்காளர் அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன், அமெரிக்கன் கல்லூரி முதல்வர் பால்ஜெயக்கர், ஆகியோர் உடன் உள்ளனர்.



► வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், கத்தாழம்பட்டு ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள்ஆர்வத்துடன் பார்வையிட்டனர்

# கடையநல்லூர் கிருஷ்ணாபுரம் முப்புடாதி அம்மன் கோவில் தை திருவிழா தேரோட்டம்

தென்காசி, ஜன.26-

கடையநல்லூர் வட்டம், கிருஷ்ணாபுரம் கல்லக நாடி முப்புடாதி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் தை மாதம் 1 நாள் தை திருவிழா நடத்துவது வழக்கம். இந்தாண்டு தை தேரோட்ட திருவிழா கடந்த 15ம் தேதி துவங்கியது. விழாவில் தினமும் காலை, மாலை வேளைகளில் சிறப்பு அபிஷேக, அலங்கார தீபாராதனைகள் நடைபெற்றது. இரவில் அம்பாள் திருவீதி உலா நடைபெற்று வருகிறது. விழாவில் முக்கிய நிகழ்வான 9ம் நாளான



தேரோட்டம் நேற்று மதியம் கோலாகலமாக நடந்தது.

இதில் அனைத்து சமுதாய தலைவர்கள் தலைமையில் பண்பொழி திருமலைக்குமாரசாமி கோயில் முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் அருணாசலம், இன்ஸ்பெக்டர் கிறிஸ்டி தேரை வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தனர்.

தேர் கற்பக விநாயகர் கோவில் தெருவிலிருந்து துவங்கி மிட்டா ஆபிஸ் தெரு வழியாக வலம் வந்த தேர் தென்காசி, மதுரை தேசிய நெடுஞ் சாலை வழியாக மீண்டும் கோயிலை வந்தடைந்தது. இதில் தொழிலதிபர்கள் அருணாசலம் செட்டியார், செல்வம், அம்மா பேரவை மாவட்ட கே டி ஆர் தியாகராஜன், மேலும், கடையநல்லூர், தென்காசி, காசிதர்மம், அச்சன்புதூர், புன்னையாபுரம், பண்பொழி. இடைகால், புளியங்குடி, செங்கோட்டை, சொக்கம்பட்டி, சிங்கிலிபட்டி உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை விழா கமிட்டியினர் மற்றும் அனைத்து சமுதாயத்தினர் செய்திருந்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை புளியங்குடி டிஎஸ்பி மீனாட்சி நாதன், கிறிஸ்டி தலைமையிலான போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் சேக் அப்துல்லா, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



# திண்டுக்கல் மாநகராட்சி 8வது வார்டில் திமுக மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கைக்கான ஆலோசனைக் கூட்டம்

சின்னாளபட்டி, ஜன 26-

திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 8வது வார்டில் முன்னாள் மாமன்ற உறுப்பினரும், திமுக வார்டு செயலாளருமான மார்க்கெட் சக்திவேல் தலைமையில் புதிய மகளிரணி உறுப்பினர் சேர்க்கைக்கான ஆலோசனைக் கூட்டம் சொசைட்டி தெருவில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. 8வது வார்டில் புதிய மகளிர் அணி நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பது, திராவிட மாடல் ஆட்சி நாயகர்; கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கென செயல்படுத்திய நலத்திட்டங்கள் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி அவர்கள் செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வீடு தவறாமல் கொண்டு சேர்ப்பது, அப்பகுதியில் உள்ள முதியோர்களுக்கு உதவித் தொகை பெற்றுத் தருவது மற்றும் மகளிர் உரிமை விடுபட்டுப் போனவர்களுக்கு மீண்டும் கிடைக்க உதவி செய்வது, தங்கள் பகுதியில் உள்ள பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து அவர்களிடமிருந்து மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்து தீர்வு காணச்செய்வது உட்பட பல்வேறு தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மகளிர் அணியைச் சேர்ந்த ஹேமா, கிருஷ்ணவேணி, ஜெயலெட்சுமி, சரோஜா மற்றும் 8வது வார்டைச் சேர்ந்த பெண்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



# பஸ்சில் கடத்தி வந்த 21 கிலோ கஞ்சா பறிமுதல்

## பெண் உள்பட 6 பேர் கைது

நெய்வேலி, ஜன.26-

நெய்வேலி பகுதியில் வெளி மாநிலங்களில் இருந்து கஞ்சா கடத்திவரப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக காவல்துறைக்கு தகவல் கிடைத்து. அதன்பேரில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்று நெய்வேலி ஆர்ச் கேட் பகுதியில் பஸ்சில் 21 கிலோ கஞ்சா மூட்டை எடுத்து வந்த பெண் உள்பட 6 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டதில், ஒடிசாவை சேர்ந்த அபிலாஷ் குரு (28), அலிசா (24), மந்தாரக்குப்பம் பகுதியை சேர்ந்த குட்டி தேவா (24), சுதாகர் (27), கடலூரை சேர்ந்த ஜீவா (25), சந்துரு (26) என தெரிய வந்தது.

இவர்கள் ஒடிசா மாநிலத்தில் இருந்து ரயில் மூலம் கஞ்சாவை கடத்தி வந்து நெய்வேலி பகுதிக்கு பஸ்சில் எடுத்து வந்து விற்பனை செய்ய இருந்தது தெரியவந்தது. இதையடுத்து 6 பேரையும் கைது செய்த போலீசார், அவர்களிடம் இருந்து 3 செல்போன்கள், 21 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

# தமிழகத்தில் 2 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு!



சென்னை, ஜன.26-

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் ஒரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறி யிருப்பதாவது: குமரிக்கடல் பகுதிகளிலிருந்து வடக்கு கேரள கடலோரப்பகுதிகள் வரை ஒரு கிழக்கிலிருந்து வரும் வளிமண்டல காற்றலை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜன.26) உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 27ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 28 முதல் 31ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் ஜன.29 ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்டி அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி, செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம், விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் தலா 4 செமீ, சென்னை சோழிங்கநல்லூர், உத்தண்டி, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு, காரைக்கால், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மதுரை கோரிப்பாளையம் மேம்பாலம் பிப்ரவரியில் திறப்பு முதல்வர் திறந்து வைப்பதாக அமைச்சர் ஏ.வ.வேலு தகவல்



மதுரை, ஜன.25-

மதுரை கோரிப்பாளையம் மேம்பாலத்தை பிப்ரவரியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார் என, பாலத்தை ஆய்வு செய்த அமைச்சர் ஏ.வ.வேலு தெரிவித்தார்.

மதுரையில் கோரிப்பாளையம் பகுதியில் போக்குவரத்து நெரிசல் தவிர்க்க, ரூ.190.40 கோடியில் தமுக்கம் சந்திப்பு அண்ணாசிலை சந்திப்பு வரை 12 மீட்டர் அகலம், 2100 மீட்டர் நீளத்தில் 3 வழித்தட மேம்பாலம் அமைக்கப்படுகிறது. தமுக்கம் கோரிப்பாளைம் வரை மெயின் பாலம் பணிகள் முடியும் நிலையில், நேற்று பொதுப்பணி, நெடுஞ் சாலைத் துறை அமைச்சர். ஏவ.வேலு அமைச்சர் பி. மூர்த்தி உட்பட அதிகாரிகளுடன் நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுக ஆட்சி அமைந்த பிறகு தென்பகுதிக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக நீண்ட நாள் கோரிக்கையான கோரிப்பாளையம், செல்லூர் பகுதியை இணைக்கும் துணை மேம்பாலம் கட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் முடிவெடுத்தார். இதற்காக ரூ.190.40 கோடி நிதி ஒதுக்கி 10.11.23ல் பணி முதல்வர் தொடங்கி வைத்தார். 24 மாதத்தில் முடித்து இருக்கவேண்டும். வழக்கு காரணமாக 6 மாதம் தள்ளிப் போனது.

இரவு, பகல் பார்க்காமல் பொறியாளர்கள் பணியை துரிதப்படுத்தியுள்ளனர். முதல் கட்ட மெயின் பாலப்பணியை முடிக்க, பொறியாளர்கள், ஆட்சியர், அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர். நான் 7வது முறை ஆய்வு செய்துள்ளேன். பிப்.10ம் தேதிக்குள் மெயின் பாலம் பணி முடிந்துவிடும். இதன் பிறகு முதல்வரிடம் இசைவு பெற்று, அவர் நேரில் வந்து மேம்பாலத்தை திறந்து வைப்பார். இதற்காக தற்போது துறை செயலருடன் ஆய்வு செய்துள்ளேன். வைகை ஆற்றுப்பாலத்துடன் இணைந்து மெயின் பாலத்தில் போக்குவரத்து அதிகம் என்பதால் முதலில் திறந்து வைக்கப்படும். செல்லூர் இணைப்பு பாலமும் 3 மாதத்தில் திறக்கப்படும்.

தமிழக முதல்வர் தென்பகுதிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஏற்கெனவே மேலமடை சந்திப்பு திறக்கப்பட்டுள்ளது. தற்போது, அப்பகுதியில் மணிக்கணக்கான போக்குவரத்து சீரமைக்கப்பட்டுள்ளதாக எம்எம்ஏக்கள் கோ. தளபதி, பூமிநாதன் தெரி வித்தனர். வைகை வடகரை சாலை இன்னும் முழுமை பெறவில்லை என, அமைச்சர், எம்எல்ஏக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்துள்ளனர். வைகை தெற்கு வடகரை சாலை முடிந்துள்ளது.

நீண்ட கோரிக்கையான வடகரை சாலை பணியை முடிக்க, 3 கட்ட பணியாக பிரித்து முதல் கட்டமா ரூ.170 கோடியில் சமயநல்லூர் தேசிய நெடுஞ்சாலை இணைக்க, பணி நடக்கிறது. 2வது கட்டமாக குருவிக்காரன் அண்ணாநகர் சாலை வரை முடிக்க ரூ.29 கோடி நீதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக விரகனூர் சக்குடி வரை 8 கி.மீட்டருக்கு ரூ.128 கோடியில் பணி நடக்கிறது. இந்த 3 கட்ட பணியால் வடகரை சாலை முழுமை பெறும். மதுரை மாநகராட்சி பகுதியில் மட்டும் ரூ. 460 கோடியில் சாலை உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடந்துள்ளன.

மேலமடை பாலத்திற்கு வீரமங்கை வேலு நாச்சியார் பெயர் வைத்தது போன்று கோரிப்பாளையம் பாலத்திற்கும் பலரும் பாராட்டும் வகையில் சிறப்பான பெயரை வைக்க அமைச்சர் உள்ளிட்ட எம்எல்ஏக்கள் முதல்வரிடம் வைத்துள்ளனர். கோவையில் புதிய ஆற்றுபாலத்திற்கு சி.சுப்பிரமணி, அவிநாசி பாலத்திற்கு ஜிடி நாயுடு பெயர்களை வைத்துள்ளார். இதன்படி, பாலம் திறக்கும் முன்பே முதல்வர் என்ன எண்ணுகிறாரோ, அப்பகுதியினர் விரும்பும் பெயரை வைப்பார்.

விரகனூர் ரவுண்டானா சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் தவிர்க்க, மேம்பாலம் அமைப்பது குறித்து நெஞ்சாலைதுறையில் திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது. நிதி ஒதுக்கி பணியை தொடங்குவோம். விரகனூர் ரிங்ரோட்டை தேசிய நெடுஞ்சாலைதுறை யிடம் ஒப்படைத்தால் விமான நிலையம் அருகே சுரங்கப்பாதை அமைக்கலாம் என்றால் அதுப்பற்றி எதுவும் கடிதம் கொடுக்கவில்லை. சாலைகள் மேம்பாட்டுக்கென ழிபிகிமி க்கு இணையாக 'டான்சாய்' என்ற அமைப்பு செயல்படுகிறது.

இதன்மூலம் பெரிய, நீண்ட பாலம், புதிய சாலைகள் அமைக்கும் பணிகளை செய்கிறோம். ரிங்ரோட்டை 'டான்சாய்' மூலம் முடியுமா என பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்தியா முழுவதும் ஒவ்வொரு மாநிலத்திலும் விபத்து தடுக்க ,'பிளாக் பார்ட்' பகுதி கண்டறியப்பட்டு அதற்கான தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன்படி தமிழகத்தில் கடந்த ஆண்டு 100 இடங்களில் விபத்து தடுக்கப்பட்டுள்ளது. ரிங் ரோடு 3 இடத்தில் டோல் கட்டணம் வசூலிப்பது என்பது டெண்டருக்கு முன்பே விவரம் தெரிவிக்கப்பட்டு டோல் வசூலிக்கப்படுகிறது.

டோல் கட்டணத்தை அரசு வழங்கி, அரசே டோல் கட்டணம் பெறலாம். இருப்பினும், ஒப்பந்த நிறுவனமே குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு கட்டணம் வசூலை நிறுத்தும். நான்கு வழிச்சாலையில் வேலம்மாள் அருகே டோலுக்கென நீண்ட நேரம் வாகனங்கள் நிற்பதை தடுக்க, திட்டம் ஒன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# போதை வீடியோவை வார்டன் தந்தைக்கு அனுப்பியதால் விடுதி மாடியிலிருந்து குதித்து மாணவர் தற்கொலை

## ஆத்திரத்தில் விடுதியை சூறையாடிய மாணவர்கள்



நொய்டா, ஜன.26-

குடிபோதையில் வந்ததாக கூறி வீடியோ எடுத்து தந்தைக்கு அனுப்பியதால், பிடெக் மாணவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உத்தரபிரதேச மாநிலம் ஜான்சியைச் சேர்ந்த உதித் சோனி என்ற 20 வயது பிடெக் இரண்டாம் ஆண்டு மாணவர், கிரேட்டர் நோய்டாவில் உள்ள நாலேஜ் பார்க் 3 பகுதியில் தனியார் விடுதியில் தங்கி படித்து வந்தார். கடந்த 23ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு இவர் தனது நண்பர்களுடன் மதுபோதையில் விடுதிக்கு வந்ததாக கூறப்படுகிறது. இதனை கவனித்த விடுதி வாரடன், மாணவரை வீடியோ எடுத்து அவரது தந்தை விஜய் சோனிக்கு அனுப்பியுள்ளார். வீடியோவை பார்த்த தந்தை, தொலைபேசியில் மாணவரை கண்டித்ததுடன், படிப்பை நிறுத்திவிட்டு வீட்டிற்கு வருமாறு மிரட்டியுள்ளார். இதனால் கடும் மன உளைச்சலுக்கு ஆளான உதித் சோனி, விடுதியின் 4வது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து சக மாணவர்கள் கூறுகையில், 'இரவு 9 மணியளவில் விடுதிக்கு வந்த உதித் சோனியை விதிகளை மீறியதாக கூறி வாரடன் கண்டித்தார். இதற்கிடையே வாரடன் மற்றும் பவுன்சர்கள் பிவிசி பைப்பால் மாணவரை கடுமையாக தாக்கினர். இந்த அவமானம் தாங்காமலே அவர் உயிரை மாய்த்துக் கொண்டார்' என்று குற்றம் சாட்டினர். மாணவரின் மரணத்தால் ஆத்திரமடைந்த சக மாணவர்கள், விடுதி ஜன்னல்கள் மற்றும் அங்கிருந்த பஸ்சை அடித்து நொறுக்கி சூறையாடினர். மாணவரின் குடும்பத்தினர் அளித்த புகாரின் பேரில், விடுதி உரிமையாளர் மற்றும் வாரடன் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து வரும் போலீசார், சந்தேகத்தின் பேரில் இருவரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். பதற்றம் நிலவுவதால் விடுதி முன்பு போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# சுற்றிவளைக்கும் போர்க்கப்பல்கள் ஈரானை சூழ்ந்தது போர் மேகம்



வாஷிங்டன், ஜன.26-

ஈரானில் ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்குலைவுக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. இதில் 5,000 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் ஈரானை நோக்கி பெரும் படையை அனுப்பி வைத்திருப்பதாக அதிபர் டிரம்ப் கூறி உள்ளார். ஈரானை குறிவைத்து மத்திய கிழக்கில் அமெரிக்கா குவித்துள்ள படைகள் தொடர்பான விவரங்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்க கடற்படையின் யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர் கப்பலும் அதனுடன் 3 அழிப்புக் கப்பல்களும் இந்த வார தொடக்கத்தில் தென் சீனக் கடலை விட்டு வெளியேறி மேற்கு நோக்கிச் செல்லத் தொடங்கின.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த கப்பல்கள் விரைவில் அவை பஹ்ரைன் துறைமுகத்தில் இருந்த வந்த 3 கடலோரப் போர்க் கப்பல்களுடனும், பாரசீக வளைகுடாவில் கடலில் இருந்த வந்த மற்ற 2 அமெரிக்க கடற்படை அழிப்புக் கப்பல்களுடனும் இணையும். இதுதவிர, அமெரிக்க ராணுவ சரக்கு விமானங்கள் மத்திய கிழக்கை நோக்கி செல்வது கண்டறியப்பட்டுள்ளது.



# சிபிஐ வழக்குகளை வைத்து தலைவர்களை மிரட்டிப் பணிய வைக்கின்றனர்

## என்டிஏ கூட்டணி குறித்து பிரேமலதா பகீர் குற்றச்சாட்டு

தூத்துக்குடி, ஜன.26-

தூத்துக்குடி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தேமுதிக பொதுச்செயலாளர் புதுக்கோட்டையில் நேற்று நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். இதில் அவர் சட்டமன்ற தேர்தலில் பூத் கமிட்டி அமைப்பது குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி பேசியதாவது: நாம் யாருக்கும் எதற்கும் பயப்பட தேவையில்லை. தலைவர் எவ்வழியோ அவ்வழி தான் நானும். நம் கழகமும். தமிழ்நாட்டில் இருக்கிற பல கட்சிகளின் தலைவர்கள் மீது சிபிஐ வழக்குகள், சொத்துக் குவிப்பு வழக்குகள், லஞ்ச ஊழல் வழக்கு என எல்லா வழக்குகளும் உள்ளது.

இதை பயன்படுத்தி ஆட்சியில் இருப்பவர்கள் மிரட்டி பணிய வைக்கின்றனர். அதிலிருந்து தேமுதிக என்கிற ஒரு கட்சி தான் விதிவிலக்கு. எந்த வழக்குக்கோ எந்த ஊழலுக்கோ எந்த வஞ்சகத்துக்கோ உருட்டல் மிரட்டலுக்கு அடிபணியாமல் நெஞ்சை நிமிர்த்தி தலைவர் வழியில் கம்பீரமாக பயணித்துக் கொண்டிருக்கிற ஒரே கட்சி தேமுதிக தான். இந்த கட்சி இறுதிவரை இப்படித்தான் இருக்கும். தேமுதிக வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெறப்போவது உறுதி. இதை உங்கள் அண்ணியாக, அம்மாவாக இந்த இடத்தில் நான் கூறுகிறேன்.

2026 சட்டமன்ற தேர்தலில் தேமுதிக யாருடன் கூட்டணி அமைக்கிறார்களோ அவர்கள் தான் ஆட்சி அமைக்க முடியும். ஆட்சி அமைப்பது மட்டும் கிடையாது. தேமுதிகவிற்கு தேவையான அத்தனையும், உரிய மரியாதை, உரிய சீட்டு, உரிய பதவி, தருகிற கூட்டணியை தான் அமைப்பேன். தேர்தல் முடிவுகள் வரும் போது தேமுதிகவை சேர்ந்த பல பேர் வெற்றி பெற்று இருப்பீர்கள். அது முடிந்து மூன்றே மாதத்தில் உள்ளாட்சித் தேர்தல் வர இருக்கும். அந்த உள்ளாட்சி தேர்தலில் நமது கூட்டணியில் நமது தொண்டர்களுக்கு போட்டியிட உறுதியாக வாய்ப்பு வாங்கித் தரப்படும். அதில் அனைவரும் வெற்றி பெறப் போகிறீர்கள். இத்தனை ஆண்டு காலம் கட்சிக்காகவும், தலைவருக்காகவும் உழைத்த உங்களை பதவியில் உட்கார வைத்து அழகு பார்க்க வேண்டும் என்பதுதான் எனது எண்ணம்' என்றார்.

முன்னதாக தூத்துக்குடி வாகைகுளம் விமான நிலையத்தில் அவர் கூறுகையில், பிப்ரவரி 20ம் தேதிக்கு பிறகு தான் தேர்தல் தேதி அறிவிக்கப்பட இருக்கிறது. உரிய நேரத்தில் நல்ல முடிவை எடுத்து உங்களை அழைத்து கட்சியின் தலைமை அலுவலகத்தில் அறி விப்பேன். சரியான முடிவை சரியான நேரத்தில் எடுப்பேன். தேமுதிக கேப்டன் கட்சி. இங்கு யாரையும் மிரட்டி அடிபணிய வைக்க முடியாது என்றார்.

# “வாக்களிப்பது அரசியலமைப்பு உரிமை மட்டுமல்ல” பிரதமர் மோடி பகிர்வு



புதுடெல்லி, ஜன.26-

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு தேர்தலில் வாக்களித்து ஜனநாயக செயல்முறையில் மக்கள் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

இந்தியத் தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி 25ம் தேதி ‘தேசிய வாக்காளர் தினம்’ கடைபிடிக்கப்படுகிறது. இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, விசீ பாரத் தன்னார்வலர்களுக்கு கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது:

“ஜனநாயகத்தில் வாக்களிப்பது மிக முக்கிய உரிமையும், பொறுப்பும் ஆகும். வாக்களிப்பது அரசியலமைப்பு உரிமை மட்டுமல்ல இந்தியாவின் எதிர்காலத்தில் கட்டமைக்கும் பணியில் பங்கேற்பதற்கான ஒரு அடையாளம். நமது வளர்ச்சிப் பயணத்தின் வழிகாட்டிகள் வாக்காளர்கள்தான். விரலில் இடப்படும் அந்த அழியாத மை, நமது ஜனநாயகம் துடிப்பானதாகவும் நோக்கமுள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்யும் ஒரு கவுரவச் சின்னமாகும். இந்த பணியில் முதல் முறையாக வாக்களிக்க உள்ள வாக்காளர்களை மனமார வரவேற்கிறேன். அவர்களை ஜனநாயக கடமையாற்ற அழைக்கிறேன்.

தேர்தலில் வாக்கு செலுத்துவதன் முக்கியத்துவத்தை விசீ பாரத் தன்னார்வலர்கள் வாக்காளர்களிடம் எடுத்துரைக்க வேண்டும். ஜனநாயகத்தின் உணர்வை நாம் மதிப்போம். இதில் பங்கேற்பதன் மூலம் வளர்ந்த பாரதத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துவோம்” என்றார்.

# ஓபிஎஸ் ஆதரவாளர் தர்மர் எம்.பி அதிமுகவில் இணைந்ததன் பின்னணி என்ன?



சென்னை, ஜன.26-

தேர்தல் தொடர்பாக ஓ.பன்னீர் செல்வம் முடிவெடுப்பதில் தாமதம் ஏற்பட்டு வருவதாலும், தனது எம்.பி. பதவியை தக்க வைப்பதற்காகவும் தர்மர், அதிமுகவில் இணைந்ததாக அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

அதிமுகவை சேர்ந்த தர்மர் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன், அய்யப்பன் ஆகியோர், முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்களாக இருந்து. அதிமுக தொண்டர்கள் மீட்புக் குழு நிர்வாகிகளாக செயல் பட்டனர். சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், ஓபிஎஸ் சரியான முடிவு எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதாகக் கூறப் படுகிறது. எனவே. எம்எல்ஏ. க்களான வைத்திலிங்கம். மனோஜ் பாண்டியன் ஆகியோர் தங்களது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு திமுகவில் இணைந்தனர்.

அதிமுகவில் ஓபிஎஸ் ஆதர வாளர் ஆர்.தர்மரும், பழனி சாமியின் ஆதரவாளரான சி.வி.சண்முகமும் 2022ல் மாநிலங்களவை எம்.பி.யாக நியமிக்கப்பட்டனர். அதை யடுத்து உட்கட்சி பிரச்சினையில், ஓபிஎஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னரும், அவரது ஆதரவாளராக தர்மர் தொடர்ந்து செயல்பட்டார்.

இருப்பினும், தர்மர் கட்சியிலிருந்து நீக்கப்படாமல் அதிமுக எம். பி. யாக தொடர்ந்தார். இந்நிலையில் 2028 ஜூன் வரை எம்.பி. பதவி இருப்பதால், தர்மர் அப்பதவியை தக்க வைக்க பழனிசாமியை சந்தித்து அதிமுகவில் இணைந்துவிட்டார் என, அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர். ஓபிஎஸ் பின்னால் சென்றால் தனது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் எனக் கருதி, தர்மர் அதிமுகவில் இணைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தர்மருக்கு எம்.பி. பதவியை வலியுறுத்தியதால்தான் ஓபிஎஸ் மற்றும் பழனிசாமி இடையே கருத்து வேறுபாடு ஏற் பட்டதாக அப்போது பேசப் பட்டது. ஆனால், தர்மர் இன்று அதிமுகவில் இணைந்து பழனி சாமியுடன் கைகோத்துள்ளார் என, ஓபிஎஸ் ஆதரவாளர்கள் கூறினர்.

# “எதிர்கால தமிழகத்தின் ஹீரோவும் விஜய்தான்” செங்கோட்டையன்



சென்னை, ஜன.26-

“8 கட்சிகள் கூட்டணி, 10 கட்சிகள் கூட்டணியை முறியடிக்கும் சக்தி விஜய்க்கு மட்டும்தான் உண்டு. அவர் திரைப்படத்தில் மட்டும் ஹீரோ அல்ல, எதிர்கால தமிழகத்தின் ஹீரோவும் தான்.” என தவெக நிர்வாகக் குழு ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

தவெகவின் செயல்வீரர்கள் கூட்டம் அக்கட்சியின் தலைவர் விஜய் தலைமையில் மாமல்லபுரத்தில் நடைபெறுகிறது.

அதில் செங்கோட்டையன் பேசும்போது, “தூங்கிக் கொண்டிருப்பவர்களின் காதுகளில் சென்று விசில் அடித்துவிடாதீர்கள், ஓட்டு போய்விடும். பேருந்து நிலையங்களில், வயதானர்கள் இருக்கும் இடத்தில் திடீரென விசில் அடித்தால் அவர்கள் தடுமாறிப் போய்விடுவார்கள். பேருந்தில் பயணம் செய்யும் போது கண்டக்டர்களும் விசில் அடிக்கமாட்டார்கள் என்ற நிலை உருவாகும்.

8 கட்சிகள் கூட்டணி, 10 கட்சிகள் கூட்டணியை முறியடிக்கும் சக்தி விஜய்க்கு மட்டும்தான் உண்டு. திரைப்படத்தில் மட்டும் ஹீரோ அல்ல, எதிர்கால தமிழகத்தின் ஹீரோவும் தான்.

திமுக, அதிமுக என எந்தக் கட்சிக்காரர்களின் வீட்டிற்கு சென்றாலும் அங்கே தவெகவிற்குதான் ஓட்டு என சொல்கிறார்கள். யாரை கேட்டாலும் தவெகவுக்கு தான் ஓட்டு என்கிறார்கள். திமுகவை வீழ்த்தக்கூடிய ஒரே தலைவர் விஜய்தான்.

நாளை தமிழகத்தில் நல்லாட்சி கொடுக்கக்கூடிய ஆற்றலும், சிந்தனையும், தொலைநோக்கு பார்வையும், மனிதநேயமும், சாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஒரே தலைவர் தளபதி மட்டும் தான் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இது அனைவருக்கும் தெரியும். எந்த சக்தியாலும் இனி தமிழகத்தில் நம்மை தடுத்து விட முடியாது. அவர் முதல்வராக வருவதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது”. இவ்வாறு அவர் பேசினார்.

# இளைஞரை சுட்டுக் கொன்ற அமெரிக்க குடியேற்ற அதிகாரிகள்: ஷாக் சம்பவமும் பின்னணியும்!



நியூயார்க், ஜன.26-

அமெரிக்காவின் மினியாபொலிஸ் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட 37 வயதான அலெக்ஸ் ஜெஃப்ரி பிரெட்டியை குடியேற்ற அதிகாரிகள் 6 பேர் சூழ்ந்து கொண்டு துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற புதிய வீடியோ வெளியாகி உள்ளது. இது சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மினியாபொலிஸ் பகுதியில் கடந்த 7ம் தேதி அன்று அமெரிக்க குடியேற்ற அதிகாரி ஒருவர், ரெனி குட் என்ற பெண்மணியை சுட்டுக்கொன்றனர். இது தேசிய அளவில் மக்களை கொதிப்படைய செய்தது. அதனால் அமெரிக்காவில் மக்கள் போராட்டம் ஏற்பட்டது. அந்த வகையில் மினியாபொலிஸ் பகுதியிலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் 37 வயதான அலெக்ஸ் ஜெஃப்ரி பிரெட்டியும் பங்கேற்றதாக தகவல். செவிலியராக மருத்துவமனை ஒன்றில் அவர் பணியாற்றி வந்தார். அப்போது அவரை குடியேற்ற அதிகாரிகள் சுட்டுக் கொன்றனர். இந்த சம்பவத்தின் வீடியோ காட்சி சமூக வலைதளத்தில் தற்போது வெளியாகி உலக அளவில் கவனம் பெற்றுள்ளது.

அந்த வீடியோவில் அலெக்ஸை சூழ்ந்த குடியேற்ற அதிகாரிகள், அவரை தரையில் தள்ளி, அவரிடம் இருந்த உரிமம் பெற்ற துப்பாக்கியை பறித்தனர். அதன் பின்னர் அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதையடுத்து உடல் அசைவற்று அலெக்ஸ் காணப்பட்டார். அப்போதும் அவரை சூழ்ந்திருந்த அதிகாரிகள், துப்பாக்கியை அவரை நோக்கி குறி வைத்திருந்தனர்.

“அய்யோஞ் நீங்கள் என்ன செய்துள்ளீர்கள். யாரேனும் ஆம்புலன்ஸை கூப்பிடுங்கள். அவசர உதவி எண்ணை தொடர்பு கொள்ளுங்கள். என்னால் இதை நம்ப முடியவில்லை” என அந்த வீடியோவை படம் பிடித்த பெண் பதறுவதும் அதில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக வெளியான மற்றொரு வீடியோவில் துப்பாக்கி சூட்டுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட பெண்ணை அதிகாரி ஒருவர் தரையில் தள்ளி உள்ளார். அந்த பெண்ணுக்கு அலெக்ஸ் உதவ சென்றுள்ளார். அப்போது அவரை பிடித்த அதிகாரிகள், அவரை தனியே இழுத்து வந்தனர். அதன் பின்னர்தான் அவரை அதிகாரிகள் சுட்டுக்கொன்றனர்.

இந்த சம்பவத்தை அடுத்து குடியேற்ற அதிகாரிகளை நோக்கி ஒரு நபர் துப்பாக்கி உடன் வந்ததாகவும், அதையடுத்து தற்காப்புக்காக அதிகாரிகள் அவரை சுட்டதாகவும் அமெரிக்க அரசு தரப்பு விளக்கம் கொடுத்துள்ளது. இது ட்ரம்ப் அரசின் சட்டவிரோத குடியேற்ற தடுப்பு நடவடிக்கையின் போது நடந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசு இந்த போக்கை நிறுத்த வேண்டும் என மினியாபொலிஸ் ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

# திருப்பதியில் ரதசப்தமி விழா கோலாகலம் 7 வாகனங்களில் மலையப்ப சுவாமி பவனி: ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்




திருமலை, ஜன.26-

திருப்பதிஏழுமலையான் கோயலில் இன்று ரதசப்தமியையொட்டி ஒரே நாளில் 7 வாகனங்களில் மலையப்ப சுவாமி மாட வீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ரதசப்தமி விழா இன்று காலை கோலாகலமாக தொடங்கியது. இன்று காலை முதல் இரவு வரை மலையப்பசுவாமி பிரம்மோற்சவ நாட்களில் நடைபெறும் 7 வாகனங்களில் மாடவீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். இதனை ‘மினி பிரமோற்சவம்’ என அழைக்கப்படுகிறது.

அதன்படி இன்று அதிகாலை 5.30 மணியளவில் முதல் வாகன சேவையாக வாகன மண்டபத்தில் இருந்து 7 குதிரைகள் பூட்டிய சூரிய பிரபை வாகனத்தில் மலையப்பசுவாமி சிவப்பு பட்டு வஸ்திரம் உடுத்தி, தங்க, வைர ஆபரணங்கள் அணிந்து, சிவப்பு நிற பூமாலை சூடி மாடவீதியில் எழுந்தருளினார். மாட வீதியில் வடமேற்கு பகுதியில் சூரிய உதயத்திற்காக மலையப்ப சுவாமி சிறிது நேரம் காத்திருந்தார். காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக மேகமூட்டத்துடன் லேசான சாரல் மழை பெய்தது. தொடர்ந்து 7.15 மணியளவில் மலையப்ப சுவாமிக்கும் கற்பூர ஆரத்தி காண்பிக்கப்பட்டது. அப்போது பக்தர்கள் ‘கோவிந்தா கோவிந்தா’ என தரிசனம் செய்தனர். தொடர்ந்து மாட வீதியில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

காலை 9 முதல் 10 மணி வரை சின்னசேஷ வாகனத்திலும், 11 மணி முதல் மதியம் 12 மணி வரை கருட வாகனத்திலும், மதியம் 1 முதல் 2 மணி வரை அனுமந்த வாகனத்திலும் மலையப்பசுவாமி பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். மாட வீதிகளில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்தனர்.இதைதொடர்ந்து ஏழுமலையான் கோயில் தெப்பக்குளத்தில் சக்ரத்தாழ்வார் தீர்த்தவாரி நடைபெற்றது. தொடர்ந்து சக்கரத்தாழ்வாருக்கு மகா தீபாராதனை நடைபெற்றது. இதையடுத்து ஏராளமான பக்தர்கள் தெப்பக்குளத்தில் புனித நீராடினர்.

தொடர்ந்து மாலை 4 முதல் 5 மணி வரை கற்பக விருட்ச வாகனத்திலும், 6 முதல் இரவு 7 மணி வரை சர்வபூபால வாகனத்திலும், இரவு 8 முதல் 9 மணி வரை சந்திரபிரபை வாகனத்திலும் மலையப்பசுவாமி அருள்பாலிக்க உள்ளார். ரதசப்தமியொட்டி கோயிலில் நித்யசேவைகள், நேர ஒதுக்கீடு டிக்கெட், விஐபி தரிசனம் ஆகியவை ரத்து செய்யப்பட்டுள்ளது. சுவாமி வீதி உலா வருவதை காண்பதற்காக லட்சக்கணக்கான பக்தர்கள் திருமலையில் குவிந்துள்ளனர். 4 மாட வீதி மற்றும் வைகுண்டம் காத்திருப்பு அறையில் உள்ள பக்தர்களுக்கு தொடர்ந்து பால், காபி, மோர் அன்னப்பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது.










# எங்கள் இருள் சூழ்ந்த வாழ்வை முதல்வர்தான் விடியலுக்கு கொண்டு வரவேண்டும் பட்டதாரி ஆசிரியர்கள் கூட்டமைப்பு




திருச்சி, ஜன.26-

மறு நியமனத் தேர்வு இல்லாமல் பட்டாதரி ஆசிரியர், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் பணியிடங்களை நிரப்பி, எங்கள் இருள் சூழ்ந்த வாழ்வை முதல்வர் ஸ்டாலின் தான் விடியலுக்கு கொண்டு வரவேண்டும் என 2023ம் ஆண்டு நியமனத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற பட்டாரி ஆசிரியர்கள் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது.

இது குறித்து நியமனத் தேர்வில் தேர்ச்சிப்பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் எம்.கலைவாணி, எம்.மோகன்ரஜ், எஸ்.பாஸ்கர் ஆகியோர் திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: தமிழத்தில் கடந்த 2023ம் ஆண்டு பட்டதாரி ஆசிரியர்கள் (பிடி), வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் (பிஆர்டிஇ) நியமனத் தேர்வில் 37,000 பேர் ஆசிரியர் பணிக்கு தேர்ச்சி பெற்றனர்.

ஆசிரியர் தேர்வு வாரியம் (டிஆர்பி) 2023ம் ஆண்டு, 3,192 பிடி, பிஆர்டிஇ காலிப்பணியிடங்களை அறிவித்தது. இதில் ஆசிரியர் நியமனத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்து 2,800 காலிப்பணியிடங்களை அரசு நிரப்பி உள்ளது. மீதம் 392 பணியிடம் நிரப்பவில்லை. இது தொடர்பாக இரண்டாவது பணி நியமனப் பட்டியலையும் அரசு வெளியிடவில்லை. இதுதவிர, 726 பிஆர்டிஇ பணியிடங்கள் நிரப்பாமல் கடந்த 15 ஆண்டுகளாக காலியாகவே உள்ளன.

இந்நிலையில் கடந்த ஆண்டு டிஆர்பியின் ஆண்டு திட்டத்தில் 1,205 பிடி, பிஆர்டிஇ காலிப்பணியிடங்களுக்கு மறு நியமனத்தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். அதுதொடர்பான அறிவிப்பு வரும் மார்ச் மாதம் வெளியாகும் என அறிவித்துள்ளது. பலமுறை தகுதித்தேர்வு, தமிழ் தகுதித்தேர்வு, 2023 ஆசிரியர் நியமனத் தேர்விலும் தேர்ச்சி அடைந்து 34,200 பேர் ஆசிரியர் பணிக்காக காத்திருக்கிறோம். அப்படியிருக்கையில் மீண்டும் எதற்கு ஆசிரியர் நியமனத் தேர்வை அரசு நடத்த வேண்டும்?

பிடி, பிஆர்டிஇ என தேர்வு வைத்துவிட்டு பிடி பணியிடங்கள் மட்டும் நிரப்பி உள்ளனர். பிஆர்டிஇ பணியிடங்கள் நிரப்பவேயில்லை. விடியல் அரசு என முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார். ஆனால் நியமனத்தேர்வில் தேர்ச்சி பெற்ற பட்டாதரி ஆசிரியர்களின் வாழ்வு இருள் சூழ்ந்து கிடக்கிறது. எங்கள் இருள் சூழ்ந்த வாழ்க்கையை முதல்வர் ஸ்டாலின் தான் விடியலுக்கு கொண்டு வரவேண்டும். நாங்கள் எத்தனை ஆண்டுகள் தான் தேர்வுகளை எழுதிக் கொண்டே இருப்பது? தேர்வு எழுதி எழுதியே எங்கள் தலைமுறையே முடிந்துவிட்டது.

ஏற்கனவே ஆசிரியர்கள் நியமனத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை கொண்டு தற்போது அறிவித்துள்ள 1,025 மற்றும் 726 பிஆர்டிஇ பணியிடங்களை அரசு நியமிக்க முன் வரவேண்டும். இது தொடர்பாக தேர்தலுக்கு முன்னதாகவே அரசாணை வெளியிட முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை இன்று சந்தித்தபோது, முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக தெரிவித்தார். இவ்வாறு அவர் கூறினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000